2009 பிப்ரவரி 24]

1. மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருத்தல்

2. வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருத்தல்

3. மீனவர் குடிசை வீட்டில் வசித்து வருபவராக இருத்தல் மற்றும்

4. 3 செண்ட் நிலம் சொந்தமாக வைத்திருத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-40

## 2. தகவல் கோரல்

### (அ) இலங்கைத் தமிழர் படுகொலையைத் தடுக்கக்கோரி தீக்குளித்த தமிழ்வேந்தன் இறுதி ஊர்வலத்தில் நடந்த வன்முறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மூன்று சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. கடலூரில் இலங்கைத் தமிழர்களுக்காகத் தற்கொலை செய்துகொண்ட ஜோதி என்ற தமிழ்வேந்தனின் இறுதி ஊர்வலத்தில் ஏற்பட்ட வன்முறை குறித்து; இரண்டாவது, வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தாலுகா, தகரக்குப்பம் என்ற இடத்தில் 8-2-2009 அன்று அதிக அளவில் ரேஷன் அரிசி லாரியில் கடத்தப்பட்டது குறித்து; மூன்றாவது, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருள்மிகு ஔஷதீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள விலை மதிப்பற்ற மரகதலிங்கம் 19-2-2009 அன்று இரவு காணாமல் போனதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஆகிய மூன்று பொருள்கள் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

முதலில் கடலூரில் இலங்கைத் தமிழர்களுக்காகத் தற்கொலை செய்துகொண்ட ஜோதி என்ற தமிழ்வேந்தனின் இறுதி ஊர்வலத்தில் ஏற்பட்ட வன்முறை குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள்

திரு. டி. சுதர்சனம், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் ஆகியோர் விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக, கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு நல்வாழ்வு தேடிக் கொடுக்க வேண்டுமென்று தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை கட்சிகளும் விரும்புகின்றன. அதிலே ஒரு கட்சிக்குக்கூட மாற்றுக் கருத்து இல்லை. இருந்தாலும், ஒருசில நண்பர்கள் இதிலே மிகுந்த அக்கறை உள்ளதுபோன்று காட்டிக் கொள்வதற்காக, உணர்ச்சிபூர்வமான பிரச்சினைகளையெல்லாம் பேசி, அந்த உணர்ச்சியின் காரணமாக, வேகத்தின் காரணமாக அப்பாவி மக்கள், அப்பாவி சகோதரர்கள் தீக்குளிக்கின்ற ஒரு நிலை இப்போது தமிழகத்திலே சில இடங்களிலே ஏற்பட்டிருக்கிறது. இது வேதனை அளிக்கக்கூடிய ஒரு செயல். அவர்களுடைய குடும்பத்தாருக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை நான் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதேநேரத்தில் இறந்துபோன அந்த நண்பரின் இறுதி ஊர்வலம் கடலூரிலே செல்கின்றபோது, ஒருசிலர் சில கடைகளையெல்லாம் அடித்து நொறுக்கியிருக்கின்றார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய பேனர்களையெல்லாம் கிழித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பேனர்களையெல்லாம் கிழித்திருக்கிறார்கள். உண்மையாக இறுதி ஊர்வலத்திலே செல்கின்றவர்கள் மௌனமாகச் செல்வார்கள். ஆனால் எல்லாக் கடைகளையும் அடிப்பது, உடைப்பது நொறுக்குவது, பஸ்களை எரிப்பது, பொதுமக்களுக்கு இன்னல் கொடுப்பது, துன்பங்கள் கொடுப்பது, துயரங்கள் கொடுப்பது என்ற ஒரு நிலை தமிழகத்திலே ஏற்பட்டுள்ளது. முதலிலே, சென்னையிலே ஓர் ஊர்வலம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கானோர் பல மணிநேரம் ஊர்வலமாகப் போனார்கள். நான் அந்த இறுதி ஊர்வலத்தைப் பற்றி எந்தவிதமான குறையும் சொல்ல விரும்பவில்லை. அந்த இறுதி ஊர்வலத்திலே சென்றவர்கள் எப்படி நடந்துகொண்டார்களோ

2009 பிப்ரவரி 24] [திரு. டி. சுதர்சனம்]

அதேபோலத்தான் கடலூரிலும் நடந்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட ஒரு நிலைமை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும்.

*முற்பகல் 10-45*

அதற்கும் ஒரு படி மேலே போய் இப்போது சிலர் தனித் தமிழ்நாடு என்று பேசுகின்ற அளவிற்கு அவர்களுடைய நிலையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினை போய், தனித் தமிழ்நாடு என்று வந்திருக்கிறது. இப்படியே போய்க்கொண்டிருக்குமேயானால், இந்திய இறையாண்மைக்கு என்ன நிலைமை ஏற்படும் என்பதை இந்த அவை சிந்தித்துப் பார்க்கவேண்டும். காஷ்மீரத்திலேயிருந்து கன்னியாகுமரி வரையிலும், மணிப்பூரிலேயிருந்து ஜெய்சல்மர் வரையிலும் பரந்து விரிந்திருக்கின்ற இந்த பாரத தேசம் ஒன்று என்று நினைக்கின்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. தனித் தமிழகம் என்று சொல்வோமேயானால், அதனுடைய நிலை என்னவாகும், நம்முடைய நிலை என்னவாகும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படி தனித் தமிழகம் என்ற நிலையைப்பற்றிப் பேசுகின்ற யாராக இருந்தாலும், எவராக இருந்தாலும் அரசு அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சிகள் என்ற போர்வையிலே தனித் தமிழகம் என்ற பெயரை உச்சரித்துக்கொண்டிருக்கின்ற சில கட்சிகளுக்குத் தடை விதிக்கவேண்டும். தடை விதிப்பதற்கான ஏற்பாடுகளை தமிழக அரசு செய்து மத்திய அரசுக்கு அனுப்பினால், மத்திய அரசும் தடை விதிக்க ஏற்பாடு செய்யும். ஆகவே, இப்படிப்பட்ட கட்சிகளை உடனடியாகத் தடை செய்யவேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை தமிழக அரசிடம் வைத்து, இப்படிப்பட்ட அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத்தில் நடைபெறுகின்ற இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்தக்கோரி, தமிழ்வேந்தன் என்கிற தமிழ் மறவன் தன் உயிரை தீக்கிரையாக்கிக் கொண்டார். தமிழ்நாட்டில் இதற்கு முன்பாக முத்துக்குமார், பள்ளப்பட்டி ரவி, சென்னை அமரேசன், சீர்காழி இரவிச்சந்திரன் என்று 4 பேர் தங்களுடைய உயிரை தீக்கிரையாக்கிக்

கொண்டார்கள். அங்கெல்லாம் தமிழ்நாட்டிலிருக்கிற தமிழர்களும், தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினுடைய தலைவர்களும் ஆயிரக்கணக்கிலே திரண்டு இறுதி ஊர்வலத்தை நடத்தினார்கள். அமைதியான வழியில் அந்த இறுதி ஊர்வலங்கள் நடந்தன. இறுதிச் சடங்குகளும் நடந்தன. தமிழ்நாட்டில் எங்கும் கலவரம் இல்லை. எங்கும் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை.

ஆனால், கடலூரில் அரசு மருத்துவமனை எதிரிலிருந்து புறப்பட்ட அந்த ஊர்வலம், புறப்பட்டு 1½ கிலோ மீட்டரைத் தாண்டிய பிறகுதான் திடீரென்று ஒரு கும்பல் அதிலே புகுந்து ஆண்டு கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் சில பேனர்களை அடித்துக் கிழித்தார்கள். நடந்த சம்பவத்தை நான் மறுக்கவில்லை. அதைக் காவல் துறையினர் அனைவரும் குறிப்பெடுத்துக்கொண்டார்கள். புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள்.

பேரணி புறப்பட்டுக் கொண்டிருந்தபோது அங்கிருந்த தோழர்கள் இறந்தவருடைய வீட்டருகே அந்த இறுதி ஊர்வலத்தை எடுத்துச் செல்ல வேண்டுமென்று certain groups உட்கார்ந்து ஒரு மறியலில் ஈடுபட்டார்கள். அப்பொழுது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவராக இருக்கிற திரு. திருமாவளவன் அவர்கள்--நாம் காவல் துறையைத் தொந்தரவு செய்யவேண்டாம், அரசுக்கு எந்த தர்மசங்கடத்தையும் ஏற்படுத்த வேண்டாம், அங்கு வணிக நிறுவனங்கள் இருக்கின்றன, கடைகள் இருக்கின்றன, அந்த வழியாகச் சென்றால் அங்கு பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. விஷமிகள் இதிலே உள்ளே புகுந்திருக்கிறார்கள் என்று எங்கள் மருத்துவர் அய்யா அவர்களும், திரு. திருமாவளவன் அவர்களும், திரு. வைகோ அவர்களும், திரு. நெடுமாறன் அய்யா போன்றவர்களும், கம்யூனிஸ்ட் தலைவர்களும் அந்தத் தோழர்களை அழைத்துப் பேசி அமைதிப்படுத்தி, எந்தவிதக் கடைகளும் இல்லாத O.T. வழியாக அந்த இறுதி ஊர்வலத்தை நடத்துவதற்கு முயற்சித்தோம்.

இதற்கிடையில் அந்த இடத்தில் ஒரே ஒரு காவல் துறை அதிகாரி திட்டமிட்டு கையிலே துப்பாக்கி எடுத்துக்கொண்டு எவ்வளவு நேரம் உங்களிடத்திலே நான் பேசுவதென்று அசிங்கமான சில வார்த்தைகளைப் பேசி அங்கு ஒரு பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இருந்தது. இந்தப் பிரச்சினையை நாங்கள் அமைதிப்படுத்தி, ஊர்வலத்தை O.T. பகுதியை நோக்கித் திருப்பிவிட்டோம். திடீரென்று அந்த காவல் துறை அதிகாரிக்கு எங்கிருந்து உத்தரவு வந்தது என்று தெரியவில்லை, அந்தத் தகராறில் ஈடுபட்டவர்கள், அந்தப்

பிரச்சினைக்குரிய அந்த 5, 10 நபர்களைக் கைது செய்திருக்கலாம் அல்லது அவர்கள்மீதுகூட தடியடி நடத்தி அவர்களைக் கலைத்திருக்கலாம். தமிழர் பாதுகாப்பு இயக்கத்திற்கோ, தலைவருக்கோ, எங்களுக்கோ அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், திடீரென்று 500-க்கு மேற்பட்ட காவலர்கள் எங்களுடைய மருத்துவர் அய்யா, திரு. திருமாவளவன், நம்முடைய திரு. வைகோ போன்றவர்கள், கம்யூனிஸ்ட் தலைவர்கள், திரு. நெடுமாறன் அய்யா போன்றவர்கள், நடக்க முடியாத தமிழர்கள் அனைவரையும் நோக்கி 500 காவலர்களும் தடியடி நடத்தினார்கள். அந்த உடலையே எடுத்துச்செல்ல முடியாமல், 20,000-க்கும் மேற்பட்ட அந்தக் கூட்டத்தில் அவருடைய தந்தையார், அவருடைய தாயார், அவருடைய மகன்களெல்லாம் பிரிந்து திக்கில்லாமல் ஓடுகிற நிலையில் ஒரு கொடுமையான காட்சி அரங்கேற்றப்பெற்றது. தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அலுவலகத்திற்குள் புகுந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாவட்டச் செயலாளர் முதற்கொண்டு காவல் துறையால் தாக்கப்பட்டார்கள்.

முற்பகல் 10-50

நான் இந்த அவையில் வேண்டுவதென்பது, இத்தனை நாட்களும் தமிழர்களுக்காக நடத்திய எந்த ஊர்வலத்திலும் கலவரம் நடைபெறவில்லை. அண்ணன் திரு. சுதர்சனம் அவர்கள் குறிப்பிட்டதுபோல, கடலூரில் எந்த பஸ் எரிப்பும் நடக்கவில்லை. தனிப்பட்ட எந்த ஒரு சொத்துக்கும் சேதம் இல்லை. தடியடி நடத்தியபிறகு ஒரு கும்பல் ஓடிப் போய் பக்கத்தில் O.T. -க்குச் செல்கின்ற வழியிலே, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், O.T. -க்குச் செல்கின்ற வழியில்தான் ஒரு டிப்போ இருக்கிறது. அந்த டிப்போவிலே புகுந்து 7 பேருந்துகளுடைய கண்ணாடிகள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு அரசு வங்கியின் A.T.M. centre உடைய கண்ணாடி நொறுக்கப்பட்டிருக்கிறது. இதைச் செய்யத் திட்டமிட்டது ஒரு வன்முறைக் கும்பல். ஆளுங்கட்சியினுடைய பேனர்களைக் கொளுத்தி, அதைக் கிழித்து, நாசப்படுத்தியதும் திட்டமிட்ட ஒரு வன்முறைக் கும்பல். அந்த வன்முறை கும்பலைக் கைது செய்து அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அந்தப் பேரணியிலே கலந்துகொண்ட ஆயிரக்கணக்கான மக்களில் 50-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் ஏற்பட்டு, மண்டை

[திரு. தி. வேல்முருகன்] [2009 பிப்ரவரி 24

உடைக்கப்பட்டு, கை கால் உடைக்கப்பட்டு மருத்துவமனைக்குச் சென்றபோது, அங்கே உடனடியாக சிகிச்சைகூட அளிக்காமல், கைது செய்து சிறையிலே அடைத்திருக்கிறார்கள். இது ஒன்று. சரி, இது நடந்துவிட்டது. திரு. திருமாவளவன் அவர்கள் இருக்கிறார், எங்கள் ஐயா இருக்கிறார், தலைவர்கள் இருக்கிறார்கள், நாங்கள் தலைவர்களோடு முக்கிய நிர்வாகிகள்மட்டும் சென்று கொண்டிருக்கிறோம். அந்த 20,000 பேர் கொண்ட கூட்டம் சிதறி ஓடிவிட்டது. பத்திரமாகத் தலைவர்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசினுடைய காவல் துறையைச் சார்ந்த ஒரு அதிகாரி, ஒரு D.S.P, ஒரு S.P., ஒரு Inspector, ஒரு Sub-Inspector தலைவர்களைப் பாதுகாக்க, அந்தக் கலவரத்திலிருந்து அவர்களை வழியனுப்பி வைப்பதற்கு முயற்சிக்கவில்லையே? இப்படித் தலைவர்களைக்கூட பாதுகாப்பதற்கு மறுக்கின்ற ஒரு காவல் துறையினுடைய நடவடிக்கை என்பது சமூகத்தில் ஏற்புடையதா? இப்படி நடந்துள்ள இந்தச் சம்பவத்தை அரசு தீர விசாரிக்க வேண்டும்.

இந்தக் கலவரத்திற்குக் காரணமானவர்கள் யார்? ஒன்றரை கிலோ மீட்டர் ஊர்வலமாகப் புறப்பட்ட அந்த இடத்தில் திடீரென்று கலவரம் வெடிக்கிறது என்று சொன்னால் அந்தக் கலவரத்திலே கலந்துகொண்டவர்களை அடையாளம் கண்டுபிடித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக ஒட்டுமொத்தமாக தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினுடைய முன்னணித் தோழர்கள்மீது பொய் வழக்கைப் போட்டு சிறையில் அடைப்பது என்பதும், காயம்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகூடச் செய்யாமல் சிறையில் அடைப்பது என்பதும், மருத்துவமனையிலே சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்தவர்களை 24 மணி நேரம் அல்ல, இரண்டு நிமிடம்கூட சிகிச்சை அளிக்காமல் உடனடியாக அவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பது என்பதும் வேதனைக்குரிய செய்தி. ஆதலால், கலவரத்திற்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பாவித் தமிழர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். பொதுச் சொத்துகளுக்குச் சேதம் என்று சொன்னால் உங்களுடைய video clipping மூலமாக அதைச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்லுங்கள், திரு. வேல்முருகன். (குறுக்கீடு) வீடியோ கிளிப்பிங் எல்லாம் இருக்கட்டும்.

**திரு. தி. வேல்முருகன்:** மற்ற அப்பாவிகளையும், தமிழர் பாதுகாப்பு இயக்கத்தினுடைய நிர்வாகிகளையும் முன்னணித் தலைவர்களையும்,

2009 பிப்ரவரி 24] [திரு. தி. வேல்முருகன்]

தமிழ் அறிஞர்களையும் விடுதலை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, நம்முடைய தமிழக அரசு இந்தச் சம்பவத்திற்குக் காரணமான அந்தக் காவல் துறை அதிகாரிகளை, ஒட்டுமொத்தக் காவல் துறையைக் குறை சொல்லவில்லை. ஒரேயொரு காவல் துறை அதிகாரி வேண்டுமென்றே இதில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார். இந்தக் கலவரத்திற்குத் துணைபோய் இருக்கிறார். அப்படித் துணைபோய் இருக்கிற கயவர்கள்மீதும், துணைபோன காவல் துறை அதிகாரிகள்மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீக்குளித்து மரணம் அடைந்த தமிழ்வேந்தனின் இறுதி ஊர்வலத்தில் நடைபெற்ற காவல் துறையினுடைய தடியடி, அத்துமீறல் குறித்து இங்கே திரு. வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தீக்குளித்து மரணம் அடைந்தவர்கள் நான்கு பேர். இதிலே அரசியல் வித்தியாசம் இல்லாமல்கூட நடைபெற்றிருக்கிறது. குறிப்பாக, இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் அவர்கள்கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரே தீக்குளிப்பு மரணம் அடைந்திருக்கிறார். ஆகவே, இந்த இலங்கைப் பிரச்சினைக்காக அவர்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகிறவகையிலே அது ஒரு தீவிரத் தன்மைக்குப் போய்விட்டது என்பதை நாம் ஆதரிக்கவில்லை என்று சொன்னாலும், அது நடைபெற்றுவிட்டது. அது வருத்தமான செய்திதான். ஆனால் அந்த இறுதி ஊர்வலத்தில் நடைபெற்ற சம்பவம் என்பது மிகப் பெரிய கஷ்டத்தை ஏற்படுத்தி இருக்கிறது. சில சமூக விரோதிகள் அதிலே நுழைந்து வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று சொன்னார்கள். கடலூரில் நடைபெற்ற இந்த விரும்பத்தகாத சம்பவத்திலே சமூக விரோதிகள் வந்தார்கள் என்று சொல்லுகிறபோது—பதிலுரையில் நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. நேற்றையதினம் சென்னை ஹைகோர்டைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது சமூக விரோதிகள் புகுந்து தாக்குதலை ஏற்படுத்தி வன்முறையைத் தூண்டிவிட்டுவிட்டார்கள் என்று நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள்

சொன்னார்கள்—ஆனால், இந்தச் சம்பவத்திலே பதில் சொல்லுகிறபோது இதற்கு நீங்கள் என்ன சொல்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இதிலே நடுநிலையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய எதிர்ப்பார்ப்பாக இருக்கிறது.

இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பேரவையினுடைய அமைப்பைச் சேர்ந்த தலைவர்கள் ஊர்வலத்திலே செல்லுகிறபோது, இப்படிப்பட்ட தாக்குதல் நடைபெற்றிருக்கிறது. தமிழ்நாட்டிலே நம்முடைய உணர்வுகளை வெளிப்படுத்தி ஊர்வலமாகப் போவது என்பது இயல்பு. இப்படிப்பட்ட வன்முறை நடைபெறுகிறபோது, அது தேவையில்லாத ஒரு சம்பவமாக மாற்றப்பட்டுவிட்டது. வன்முறை நடைபெற்றது, சேதப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறபோது, குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது போலீசுக்குத் தெரியாத விஷயம் ஒன்றும் அல்ல. தேடித் தேடித் பிடித்துத் தாக்குவதற்குரிய திறமை நிரம்பப் படைத்த அந்தக் காவல் துறை வீடியோமூலமாகவே பதிவு செய்திருக்கிறது, குற்றவாளிகள் யார் என்று அவர்களால் இனம் காண முடியும். அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதிலே நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் பேருந்திலே வெளியூர்களுக்குச் சென்றவர்கள் வழிப்போக்கர்களாகச் சென்றவர்கள் எல்லாம், பேருந்திலிருந்து இறக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்கு வந்த தகவலின் அடிப்படையில் பார்த்தால் பேருந்திலிருந்து இறக்கி அழைத்துச் செல்லப்பட்டவர்கள் காவல் நிலையத்திலே வைத்து சமூக ரீதியாக விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். ** மற்றவர்கள் எல்லாம் போகலாம் என்று சொன்னதாகக்கூட தகவல் இருக்கிறது. அப்படியானால் அது அரசியல் சார்ந்த விஷயமாகவும் இந்த இயக்கத்திலே பங்கு பெற்றவர்களை மட்டுமே வழக்கிலே பதிவு செய்வதற்குரிய ஒரு முயற்சி என்ற அடிப்படையிலேயும் வருகிறது. அப்படியானால். . . (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-55*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2009 பிப்ரவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, யாராவது, ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) யார் பேசப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், திரு. டி. சுதர்சனம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் ஏதோ ஜாதி உணர்வை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் எல்லாம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினைச் சேர்ந்த நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் கடலூரில் நடந்த சம்பவத்தைப் பற்றி இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அவர்கள் பேசுகின்றபோது, காவல் துறையினர் அங்கே நடவடிக்கையினை எடுக்கின்றபோது, குறிப்பாக இரண்டு ஜாதியினரைப் பற்றிச் சொல்லி, என்ன ஜாதி என்று கேட்டு அவர்களை மட்டும் தாக்கியதாகவும், மற்ற ஜாதியினரை எல்லாம், நீங்கள் போய்விடுங்கள் என்று காவல் துறையினர் சொன்னதுபோலவும், ஒரு ஜாதி வேறுபாட்டை, துவேஷத்தை அவர்கள் உண்டுபண்ணுவதைப்போல ஒரு தோற்றம் இருக்கிறது. எனவே, அந்த வார்த்தைகளை, அதாவது குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றி சொன்ன வார்த்தைகளை நீக்க வேண்டும். ஒரு சமூகம் என்று சொன்னால்கூட அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். "நீ எந்த சமூகம்? நான் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்தவன்" என்று அவர் பேசும்போது சொல்லியிருக்கலாம். ஆனால் ஜாதியைக் குறிப்பிட்டுச் சொல்லி அதனை அவையிலே பதிவு செய்து, அது நாளை இங்கிருந்து வெளியே போகும் என்று சொன்னால், தமிழகம் எங்கும் இதைப்போன்ற ஒரு கருத்தை உருவாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வரும். எனவே, அந்த இரண்டு வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் ஜாதி சம்பந்தமாக சொன்ன அந்த வார்த்தைகள் அவைக்

குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். Controversial -ஆகப் பேசாமல் உங்களது கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன விஷயங்களையே அண்ணன் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் திசைத் திருப்புகிறார். ஜாதிப் பெயரைச் சொல்லி அவர்கள் தாக்கினார்கள் என்று நான் சொன்னதாகச் சொல்கிறார். அது தவறு. நான் சொன்னது, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இந்தக் குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களை மட்டுமே வழக்குப் பதிவு செய்துவிட்டு, மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்களை வெளியேற்றிவிட்டார்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் இப்போதும் சொல்கிறேன். இந்த இரண்டு சமூகத்தைத்தவிர. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுள்ள அந்த நிகழ்ச்சியில் நாம் எந்த அளவிற்கு தலையிட்டு நம்முடைய கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்பதற்கு ஒரு எல்லை உண்டு. விசாரணை நடைபெற்றபோது தவறு செய்திருக்கலாம். தவறான விசாரணை நடைபெற்றது என்று சொல்லலாமேதவிர, அவர்கள் பேசியதாக திரு. சிவபுண்ணியம் அவர்கள் சொல்கின்ற ஒவ்வொன்றையும் அவர்கள் மறுக்கக்கூடும். அவர்கள் மறுக்கக்கூடிய வாய்ப்பு இப்போது இல்லை. ஆகவே, அந்தக் கருத்துப் பரவிவிடுமானால், விளைவுகள் வேறாக இருக்கும். அந்த தீய விளைவுகளுக்கு இடம் தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. சிவபுண்ணியம் அவர்களுக்கு ஜாதியிலே நம்பிக்கை கிடையாது. அவரைப்போல எனக்கும் கிடையாது. எவன் எந்த ஜாதிப் பெயரைச் சொன்னாலும், அது உண்மையல்ல என்ற கருத்து எனக்கு உண்டு. இருந்தாலும், அப்படி விசாரணை நடைபெற்றதாக மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் இந்த அவையில் பதிவு செய்ய வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

2009 பிப்ரவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் ஜாதி சம்பந்தமாகச் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மற்றதை சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேராசிரியர் அவர்கள் சொன்னதிலே, எனக்கும் உடன்பாடுதான். நானும் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கின்றேன். குறிப்பாக, இந்த உணர்வுகளைச் சொல்கிற காரணத்தால், துவேஷம் செய்து, வன்முறையில் ஈடுபடுவதற்கு தூண்டுவதாக தயவு செய்து கருதக்கூடாது. ஆனால், வழக்குப் பதிவு என்பது இப்படி வந்துவிடக்கூடாது. இப்போதும் சொல்கிறேன். நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நீங்கள் அதை பரிசீலியுங்கள். நான் சொன்னது தவறாக இருந்தாலும்கூட இன்னொரு சந்தர்ப்பத்திலே, நாளைக்கு இந்த அவையிலே வெளியிடுங்கள். அதைத்தான் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இந்தச் சம்பவத்தில் அப்பாவி மக்கள் தாக்கப்பட்டது மட்டுமல்ல, அவர்கள் மருத்துவ சிகிச்சைகூட பெறமுடியாமல் சிறையில் அடைக்கப்பட்டுவிட்டார்கள். ஆகவே, உண்மைக் குற்றவாளிகள்மீது வழக்குத் தொடரலாம். வன்முறை செய்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்குங்கள். ஆனால், அப்பாவியாக ஊர்வலத்தில் வந்தவர்கள்மீதெல்லாம், வழக்குப் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. உடனடியாக அவர்கள்மீதுள்ள வழக்குகளை நீக்கம் செய்து, விடுதலை செய்யவேண்டுமென்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத் தமிழர்களுக்காக தனது இன்னுயிரைத் தியாகம்செய்த ஜோதி என்கிற தமிழ்வேந்தனின் உடல் கடலூர் பொது மருத்துவமனையின் எதிரிலே, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் குறிப்பிட்டு அனுமதி தந்த இடத்தில்தான் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. இரண்டு நாட்கள் அந்த உடல் அங்கே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த நேரத்திலும்கூட, ஒரு சிறு அசம்பாவிதமும் அங்கே ஏற்படவில்லை.

[திரு. து. ரவிக்குமார்] [2009 பிப்ரவரி 24 முற்பகல் 11-00

பொது மக்கள் மருத்துவமனைக்கு வழக்கம்போல வந்து போய்க்கொண்டிருந்தார்கள். சாலைப் போக்குவரத்தும் தடுக்கப்படவில்லை. அது மிகவும் நெருக்கடியான, போக்குவரத்து மிகுந்த ஒரு சாலை. எனினும் ஒரு பேருந்துகூட அங்கே தடுக்கப்படவில்லை, நிறுத்தப்படவில்லை. இப்படி அமைதியாக இருந்த அந்த நிகழ்வில், அந்த ஊர்வலத்தின் தொடக்கத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒரு கலவர கும்பல் உள்ளே புகுந்து, வேண்டுமென்றே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பேனர்களை குறிப்பாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பிறந்த நாளுக்காக வைக்கப்பட்டிருந்த பேனர்களைக் குறிவைத்துக் கிழித்தார்கள். அப்பொழுதே எங்களுடைய தலைவர் திரு. திருமாவளவன் அவர்கள், ஒலிபெருக்கியிலே, ‘அந்த பேனர்களைக் கிழிப்பவர்களை காவல் துறை உடனே பிடியுங்கள், பிடியுங்கள்’ என்று கெஞ்சி, கதறிக் கொண்டே வந்தார். ‘அவர்களையெல்லாம் பிடியுங்கள்’ என்று கேட்டுக்கொண்டே வந்தார். ஒலிபெருக்கியிலே பேசியது பதிவாகியிருக்கிறது. காவல் துறை வீடியோ எடுத்திருக்கிறது. அப்படி பேனர்களைக் கிழித்தவர்களைக் காவல் துறையினர் கைது செய்யவும் இல்லை, பிடிக்கவும் இல்லை, அவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டே இருந்தார்கள். 400-க்கும் மேற்பட்ட காவல் துறையினர் இருந்தார்கள். அவர்கள், அவர்களைத் தடுத்திருந்தால், அப்பொழுதே பிடித்திருந்தால், அந்தச் சம்பவம் தொடர்ந்திருக்காது. ஆனால், அப்படி பிடிக்காத, தடுக்காத காவல் துறையினர், குறிப்பிட்ட ஒரு பகுதி, அந்தத் திருப்பத்திற்கு வந்தபிறகு, திடீரென்று வேண்டுமென்றே அங்கே ஒரு தள்ளு-முள்ளு ஏற்படுகிற ஒரு சூழ்நிலையை உருவாக்கி, தேவையில்லாத ஒரு தடியடியை நடத்தினார்கள். அங்கேயிருந்த இளைஞர்கள் இறந்துபோன தமிழ்வேந்தனின் வீட்டுக்கு அருகிலே, இந்தச் சடலத்தை கொண்டு போக வேண்டுமென்று கெஞ்சினார்கள். அதற்கு நாங்கள் மறுத்து, வேறு பாதையிலே, அந்தச் சடலத்தைக் கொண்டு போனோம். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு மிகக் கடுமையான முறையிலே தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கே கைது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதற்குப் பிறகு, அமைதியான முறையிலே, அந்த ஊர்வலம் சென்று, உடல் அடக்கம் செய்யப்பட்டுவிட்டது.

2009 பிப்ரவரி 24] [திரு. து. ரவிக்குமார்]

அதன்பிறகு, பேருந்து நிலையத்திற்குச் சென்று, பேருந்துகளிலே கருப்புச் சட்டை அணிந்து கொண்டு உட்கார்ந்து இருந்தவர்கள், சிறு வயதினராக இருந்தவர்கள், காலிலே செருப்பு இல்லாமல் இருந்தவர்களையெல்லாம் அடையாளம் கண்டு, அவர்களை மட்டும் அழைத்துச் சென்று, காவல் துறையினர், காவல் நிலையங்களிலே வைத்து கடுமையாகத் தாக்கியிருக்கிறார்கள்.

நேற்றையதினம் நான், கடலூர் மத்திய சிறைச்சாலைக்கு சென்று, அங்கே கைது செய்து அங்கே வைக்கப்பட்டிருக்கிற அந்த இளைஞர்களை, சிறுவர்களைப் பார்த்தேன். அதிலே, ஏறத்தாழ ஆறு பேர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள். இப்போது தேர்வு நடந்துக்கொண்டிருக்கிறது. தேர்வுகூட எழுதமுடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் பேருந்துகளிலே உட்கார்ந்துக் கொண்டு இருந்தவர்கள், அவர்கள் இந்த ஊர்வலத்திற்கு வந்தவர்கள்கூடக் கிடையாது. இப்படியானவர்கள் 53 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலே பலபேர் சிறுவர்கள். இந்த அப்பாவிகள்மீது இந்த வழக்கைப் போட்டிருப்பது நியாயமா என்றுதான் கேட்கிறோம். காவல் துறையினுடைய வீடியோ பதிவிலே, யார் இந்த சம்பவத்திலே, கலவரத்திலே ஈடுபட்டார்கள் என்பது தெளிவாக இருக்கிறது. அவர்களை மட்டும் அடையாளம் கண்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதிலே எங்களுக்கு எந்தவித மாறுபாடும் கிடையாது. நாங்கள் அதை மறுக்கவில்லை. அவர்கள்மீது நடவடிக்கை எடுங்கள் என்று நாங்கள் கேட்கின்றோம். அவர்களே, தங்களிடத்திலே ஆதாரங்களை வைத்துக்கொண்டு, இப்படியான அப்பாவிகளை, மாணவர்களைக் கைது செய்து, சிறையிலே அடைத்திருப்பது, அவர்கள்மேல் கொலைமுயற்சி வழக்கு, கொள்ளையடிக்க முயற்சித்ததாக வழக்குப் பதிவு செய்திருப்பது நியாயம்தானா? இது பொது அமைதியைப் பாதுகாப்பதற்கு உதவுமா என்பதை இந்த அவையின் பரிசீலனைக்கு வைத்து, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அ.இ.அ.தி.மு.க. சார்பில் அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்கள் அவையில் இல்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2009 பிப்ரவரி 24

கட்சியினுடைய ஆதரவாளர் தமிழ்வேந்தன் என்பவரது சவ ஊர்வலத்தின்போது நடந்த பிரச்சினை பற்றி, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு. டி. சுதர்சனம் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திரு. தி. வேல்முருகன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் திரு. து. ரவிக்குமார் அவர்களும், இங்கே பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே திரு. வேல்முருகன் அவர்கள் பேசும்போது, அங்கே நடைபெற்ற அந்த ஊர்வலத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பேனர்கள் எல்லாம் கிழிக்கப்பட்டன என்று அவரே இங்கே ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கிறார். அதைப்போல, திரு. ரவிக்குமார் அவர்களும், அதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே மட்டும், சில குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் பஸ்ஸிலேயிருந்து இறக்கப்பட்டு அவர்களெல்லாம் கைது செய்யப்பட்டார்கள் என்றெல்லாம்கூடச் சொன்னார்கள்.

ஒன்றை மட்டும் நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். இலங்கைத் தமிழர் பிரச்சனையிலே 4 பேர் இறந்து விட்டார்கள் என்று சொன்னார்கள், நான்கு பேரல்ல. காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இரவிச்சந்திரன் என்பவரும் இறந்திருக்கிறார். மனித சங்கிலிப் போராட்டம் கடந்த 21 ஆம் தேதி தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலே நடைப்பெற்றபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சிவபிரகாசம் என்பவரும் இறந்து இருக்கிறார். எனவே, இலங்கைத் தமிழர் பிரச்சினையில், கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, உணர்ச்சிவசப்பட்டவர்கள், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் உயிர் நீத்திருக்கிறார்கள். தங்களைத் தாங்களே வருத்திக்கொண்டு, தீ வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு சோகமான சம்பவம். அதற்காக எங்களுடைய வருத்தத்தை இந்த அவையின்மூலமாகக்கூட தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால், கடலூரில் நடைபெற்ற சம்பவம் என்னவென்றால், தமிழ்வேந்தன் என்பவர் இறந்துவிட்டார்; அங்கு ஊர்வலம் நடத்துகிறார்கள். அந்த ஊர்வலத்திலே என்ன நடைபெற்றது என்பதை அரசாங்கத்தின்மூலமாக எனக்குக் கிடைத்த தகவலை மட்டும் இந்த அவையிலே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கின்றேன்.

2009 பிப்ரவரி 24] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

*முற்பகல் 11-05*

கடலூர் மாவட்டம், குழந்தை காலனியைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஆதரவாளர் ஜோதி என்கிற தமிழ்வேந்தன் 18-2-2009 அன்று மாலை கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் தீக்குளிக்க முயற்சித்துள்ளார். அக்கம்பக்கம் இருந்தவர்கள், உடனடியாகத் தீயை அணைத்து அவரைத் தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். தமிழ்வேந்தன் சிகிச்சையில் இருந்தபோது, இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தீக்குளித்ததாகக் கூறியுள்ளார். அரசு மருத்துவமனையில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல் துறையினர் செய்தனர். சிகிச்சையில் இருந்த தமிழ்வேந்தனை பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் சென்று விசாரித்தனர். சிகிச்சையிலிருந்த தமிழ்வேந்தன், சிகிச்சை பலனளிக்காமல் கடந்த 19-2-2009 அன்று இறந்துபோனதால், அவரது உடல் கடலூர், புதுநகர் காவல் நிலைய சரகம் விஸ்வநகரம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி அலுவலகத்திலே பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக வைக்கப்பட்டது. அவ்விடத்தில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

20-2-2009 அன்று தமிழ்வேந்தனின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள திரு. பழ. நெடுமாறன், மருத்துவர் ச. இராமதாஸ், திரு. வைகோ, திரு. தொல். திருமாவளவன், திரு. வெள்ளையன் ஆகியோர் தலைமையில் சுமார் 4,500 பேர் குழுமி இருந்தனர். இறுதி ஊர்வலத்தையொட்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மேலும், கடலூர் நகரம் மற்றும் மாவட்டத்தின் முக்கிய இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஊர்வலத்தை சிதம்பரம் சாலை வழியாக கொண்டுசென்று மணல் வெளியிலே அடக்கம் செய்வதாக முன்னதாகவே முடிவு செய்யப்பட்டு, ஊர்வலம் புறப்பட்டது. தலைவர்கள் முன்னணி வகிக்க விஸ்வநகரத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு, தக்க பாதுகாப்புடன் சென்றுகொண்டிருந்தது. ஊர்வலத்தின் பின் பகுதியிலே வந்த சிலர், திருப்பாதிரிப்புலியூர் சீமாட்டி சிக்னல் அருகே ஊர்வலம் சென்றபோது தமிழ்வேந்தனின் சொந்த ஊரான குழந்தை காலனியைச் சேர்ந்த குடியிருப்புவாசிகள் சிலருடன் சேர்ந்து, சிதம்பரம் சாலை வழியாக ஊர்வலத்தைச் செல்ல விடாமல், லாரன்ஸ் சாலை வழியாக ஊர்வலம் செல்ல வேண்டும் என்று காவல் துறையினரை நிர்ப்பந்தித்தனர். காவல் துறையினரின்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2009 பிப்ரவரி 24

அறிவுரையை அவர்கள் ஏற்க மறுத்து, அரசியல் கட்சிகளின் பதாகைகளைச் சேதப்படுத்தி, காவல் துறையினரின்மீது கற்களை வீசினர். காவல் துறையினர் எச்சரித்தும் கேளாமல் தொடர்ந்து கற்களை வீசி ஊர்வலத்தில் குழப்பம் ஏற்படுத்த முயற்சித்ததால், அவர்களைக் காவல் துறையினர் கலைத்தனர். ஊர்வலம் எந்த இடையூறும் இல்லாமல் சிதம்பரம் சாலை வழியாக சென்று மணல் வெளியிலே தமிழ்வேந்தன் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஊர்வலத்திலிருந்து கலைந்து சென்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த சில பேரும், மற்ற சில சமுதாய விரோதிகளும் 21 அரசுப் பேருந்துகளின் கண்ணாடிகளை உடைத்துச் சேதப்படுத்தியிருக்கின்றனர். மேலும், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவினுடைய ஏ.டி.எம். மையம் மற்றும் பி.எஸ்.என்.எல். அலுவலகக் கண்ணாடிகளை உடைத்திருக்கின்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15 digital banner-களைக் கிழித்து சேதப்படுத்தியுள்ளனர். இச்சம்பவத்தில் காவல் துறையினர் 3 பேரும், பொதுமக்கள் 2 பேரும், தினகரன் பத்திரிகை நிழற்பட நிபுணர் ஒருவரும், காயமடைந்திருக்கிறார்கள். கடலூர் நகரில் காவல் துறையினர் பாதுகாப்பை பலப்படுத்தி, மேற்கொண்டு அசம்பாவிதம் ஏற்படாமல் பார்த்துக்கொண்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். இது சம்பந்தமாக 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, இதுவரை 43 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஊர்வலத்தில் சென்ற சிலர், ஏற்கெனவே ஒப்புக்கொண்டதற்கு மாறாக ஊர்வலத்தின் பாதையை மாற்றக் கோரி காவல் துறையினரை நிர்ப்பந்தித்து, காவல் துறையினரைத் தாக்கி, பொது சொத்துகளுக்குச் சேதம் விளைவித்து, ஊர்வலத்தில் குழப்பம் செய்ய முயற்சித்ததால், அவர்களை காவல் துறையினர் கலைத்து, ஊர்வலம் அமைதியாகச் செல்ல வழிவகை செய்தனர். வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன.

மேலும், இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, அவர்களுக்கு மருத்துவ வசதிகள் செய்து தரப்படவில்லை என்ற புகார் உண்மையாக இருக்குமானால், உடனடியாக இந்த அரசு அவர்களுக்கு மருத்துவ உதவி செய்து தரவும், யார் மீதாவது தவறாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்று எடுத்துச் சொன்னால், அது பற்றியும் காவல் துறையினருக்கு உரிய அறிவுரைகள் வழங்கி, அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்யும் என்பதை நான் இந்த அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.